

திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, முகையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000/– ரொக்கம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கினார். கழக துணை பொதுச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார். உடன் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட துணைச் செயலாளர் இரா.கற்பகம், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ்.லூயிஸ், ஒன்றியக் குழுத் தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், மாவட்டக் கவுன்சிலர் ராஜீவ்காந்தி, ஒன்றிய நிர்வாகிகள் காத்தவராயன், ராமநாதன் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### செஞ்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு

# ரூ.3,000/- ரொக்கத்துடன் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜன. 9 -

செஞ்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3,000/- ரொக்கத்துடன் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

பொங்கல் பண்டிகை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பாக பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, வேட்டி, சேலை, முழு கரும்புடன் ரூபாய் 3,000 ரொக்கமாக வழங்குவதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

இந்தப் பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று முதல் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி விவசாய கூட்டுறவு கடன் சங்கம் வளாகத்தில் உள்ள நியாய விலைக் கடையில் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கூட்டுறவு துணை பதிவாளர் ஜீவிதா தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றியப் பெருந் தலைவர் விஜயகுமார் முன்னிலை வகித்தனர்.

வங்கியின் உதவி செயலாளர் ராமு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு 643 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 3,000 ரொக்கத்துடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை இயக்குனர் மாரியப்பன், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், கள அலுவலர் கண்ணன், சார் பதிவாளர் ரேவதி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, நகரச் செயலாளர் கார்த்திக், வங்கி அலுவலர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3,000/– ரொக்கத்துடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார், கூட்டுறவு துணை பதிவாளர் ஜீவிதா, மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகரச் செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையில் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. குடும்ப அட்டைக்கு பொங்கல் பரிசாக ரூ.3,000/– ரூபாய் மற்றும் தொகுப்புகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், ஒன்றியச் செயலாளர் வெங்கடேசன், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணமேனன், ஊராட்சி மன்றத் தலைவர் திலகவதி சாரதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, விழுப்புரம் நகரம், வி.மருதூர், ரேஷன் கடை எண்: VCS8ல் விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர், டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் (ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, வேட்டி, சேலை மற்றும் முழு கரும்புடன்) ரூ.3,000 ரொக்கமாக வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், நகரப் பொறுப்பாளர் இரா.சக்கரை, பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி சார்பில், காட்டுக் கூடலூர் ஊராட்சியில், தை திருநாளை முன்னிட்டு பொங்கல் தொகுப்பு, ரூபாய் 3,000/– பரிசுத் தொகை வழங்கும் விழா நடைபெற்றது. சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். அமைச்சர் சி.வி.கணேசன் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்புகளை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் புண்ணியகோடி, ஒன்றியச் செயலாளர்கள் அ.குணசேகரன், தி.வேல்முருகன், அவைத்தலைவர் ஆர்.ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் பொ.புகழேந்தி, க.அறிவழகன், துணைச் செயலாளர்கள் சுமதி நந்தகோபால், செல்வகுமார், நகரச் செயலாளர் வி.குருநாதன், கே.எம்.ஜெகன்நாதன், ஞானசேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சி நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர்களுக்கு பொன்னான வாய்ப்பு!

# மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர், மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!



சென்னை, ஜன. 9-

“கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது” என்று மீனவர் நல வாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ. ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான முனைவர். அ. ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மீனவர்கள் நலன் சார்ந்து ஏராளமான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியது தொடங்கி மீனவர்கள் நலன்நாடும் பல திட்டங்கள் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் தமிழக மீனவர்களுக்கு கூடுதல் பலன்களைக் கொடுக்கும் வகையில் அவர்களை மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்க்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. இதற்கான சிறப்பு முகாம்கள் 8 ஆம் தேதி தொடங்கி, வரும் 31 ஆம் தேதிவரை நடக்கிறது. முதல் நிகழ்வாக குமரி மாவட்டத்தில் வரும் 8 ஆம் தேதி இந்த முகாம் தொடங்குகிறது. ஒவ்வொரு ஊரிலும் நடக்கும் முகாம்கள் குறித்து மீன்வளத்துறை அலுவலகம் மூலம் சுற்றறிக்கையாக அனுப்பி விழிப்பூ ணர்வூட்டப்பட்டு வருகிறது.

**யாரெல்லாம் சேரலாம்?**

18 வயது முதல் 65 வரையுள்ள மீன் தொழிலாளர்கள் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேரலாம். இதுவரை உறுப்பினராக இல்லாதவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதன் மூலம் பயனாளிகளை விரிவுபடுத்துவதுடன், கழகத் தலைவர் மீனவ சமூகத்திற்கு வழங்கியிருக்கும் திட்டங்களையும் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதே இதன் முதன்மை நோக்கம்.

**தேவையான ஆவணங்கள்**

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு வயது மற்றும் இருப்பிடத்தைக் காட்டும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களான குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட இதர முக்கிய ஆவணங்களின் நகல், வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றோடு, உறுப்பினராக சேர வரும் மீனவர்கள் தங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தையும் கொண்டு வரவேண்டும்.

**செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளர்களுக்கு ஏராளமான நிவாரணங்களும், உதவித் தொகையும் பெறமுடியும். உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளி விபத்தினால் மரணம் அடைந்தால் 2 லட்சம் ரூபாயும், இரண்டு கைகளையோ, அல்லது இரு கால்களையோ இழந்திருந்தால் ஒரு லட்சம், ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு ஏற்பட்டால் ஒரு லட்சம் என நிவாரணத் தொகை வழங்கப்படும்.

இதேபோல், இருகண்களிலும் பார்வை இழப்பு ஏற்படும் பட்சத்தில் ஒரு லட்சம் ரூபாயும், உடல் உறுப்புகளில் ஏதேனும் விபத்தில் இழப்பு ஏற்பட்டால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படும். இதேபோல் மீன்பிடித் தொழிலின் போது ஏற்படும் உயிரிழப்பிற்கும் 2 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். இயற்கை சீற்றத்தினாலோ, பேரிடரினாலோ கடலில் மீனவர்கள் காணாமல் போனாலும் நலவாரிய உறுப்பினராக இருக்கும் மீனவரின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். இதேபோல் நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீனவர் இயற்கை மரணம் அடைந்தால் 25000 ரூபாயும், அவரது ஈமச் சடங்கு செலவிற்கென 2500 ரூபாயும் வழங்கப்படும்.

**கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்!**

நலவாரியத்தில் உறுப்பினராக இருப்பவரின் மகன், மகளுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகையும் கிடைக்கும். நலவாரிய உறுப்பினரின் மகன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் 1250 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1750 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் உறுப்பினரின் மகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

உறுப்பினரின் மகன் ஐடிஐ, பாலிடெக்னிக் போன்ற தொல்நுட்பக் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 1950 ரூபாயும், கலைக் கல்லூரிகளில் இளங்கலை படித்தால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். முதுகலை படிப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 3750 ரூபாய் வழங்கப்படும். சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற இளங்கலை தொழிற்படிப்புகளுக்கு அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 4750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் முதுகலை தொழில் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 6750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.

நலவாரிய உறுப்பினர்களின் மகனின் திருமணத்திற்கு 3000 ரூபாயும், மகளின் திருமணத்திற்கு 5000 ரூபாயும் வழங்கப்படும். இதேபோல் மகப்பேறு காலத்திலும் 6000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தின் 14 மாவட்டங்களிலும் இருக்கும் மீனவ மக்கள் இந்த நல்லவாய்ப்பினை பயன்படுத்தி, மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்ந்து பலன் அடைய வேண்டும். மேலும், மீனவ மக்களின் நலனிற்காக மீனவர் நலவாரியத்திற்கு தலைவரை நியமித்து, மீனவ மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் முகாம் நடத்தி, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த ஆவணச் செய்த கழகத் தலைவர், முதல்வர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**அரங்கத்துறை**

அ. து. ந. க. எண். அ3 / 1818 / 2025 — **மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம்- 6, 7 மற்றும் 8ல் புதிய கால்பந்துத் திடல் மற்றும் - **“Eco Bloc Infiltration tank with the Storage Capacity of 250 cum”** அமைக்கும் பணி

**பணியின் உத்தேச மதிப்பு ரூ.129.11 இலட்சம் முதல் ரூ.190.78 இலட்சம் வரை,**
**முன்வைப்பு தொகை: பணியின் மதிப்பில் 1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **22.01.2026** அன்று மாலை **3.00** மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **23.01.2026** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 108 / ஒப்பந்தப்புள்ளி / 2026 — **கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம)வி)**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க.காசிநாதன் (எ) தமிழரசன்**
**சனவரி 9 (2013)**



சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர் .

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**